பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 65

21.08.2026

லஞ்சம் கேட்டு பெற்ற அண்ணா கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், செயலாளர் கைது

புகார்தாரர் திரு.லோகநாதன், காந்தி நகர், திருப்பூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் அண்ணா கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் வீட்டு கடன் ரூ.22,00,000/- விண்ணப்பித்து, 11.08.2026 அன்று வீட்டு வசதி கடன் புகார்தாரருக்கு அண்ணா கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மூலமாக வழங்கப்பட்டது. திருமதி.ஜோதிமணி, செயலாளர், அண்ணா கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், தனி நபர்கள் திரு.திருநாவுக்கரசு மற்றும் திரு.தக்ஷின் ஆகியோர்கள் தங்களுக்கு லஞ்சமாக ரூ.66,000/- (3% கமிசன் தொகை) கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர், பின்னர் லஞ்ச பணத்தை குறைத்து ரூ.60,000/-மாக கேட்டுள்ளனர், பின்னர் மீண்டும் குறைத்து ரூ.55,000/-மாக கேட்டு வற்புறுத்தியுள்ளார். 19.08.2026 அன்று திருமதி.ஜோதிமணி, செயலாளர், அவர்களின் உத்தரவின்படி தனி நபர் திரு.திருநாவுக்கரசு ரூ.10,000/- லஞ்ச பணத்தை முண்பணமாக புகார்தாரரிடமிருந்து பெற்றிருந்தார். மேற்கொண்டு லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருப்பூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 21.08.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது இன்று திருமதி.ஜோதிமணி, செயலாளர், அவர்களின் உத்தரவின்படி தனி நபர்கள் திரு.திருநாவுக்கரசு மற்றும் திரு.தக்ஷின் ஆகியோர்கள் மீதமுள்ள ரூ.45,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

PRESS RELEASE – 65
21.08.2026

SECRETARY, ANNA CO-OPERATIVE HOUSE BUILDING SOCIETY LIMITED ARRESTED FOR BRIBE

The complainant, Tr. Loganathan, residing at Gandhi Nagar, Tiruppur district, had applied for a housing loan of Rs.22,00,000/- with the Anna Co-operative House Building Society Limited, and the said loan was sanctioned to complainant on 11.08.2026. In connection with the sanction and disbursement of the housing loan, Tmt. Jothimani, Secretary, Anna Co-operative House Building Society Limited, along with private individuals Tr. Thirunavukkarasu and Tr. Dhaksin, demanded a bribe of Rs.66,000/- (being 3% of the sanctioned loan amount) from the complainant, which was subsequently reduced to Rs.60,000/- and thereafter to Rs.55,000/- on 19.08.2026 on the instructions of Tmt. Jothimani, Secretary, private individual Tr. Thirunavukkarasu received Rs.10,000/- as advance bribe amount from the complainant. Unwilling to give further bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tiruppur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (21.08.2026). During the trap proceedings conducted on 21.08.2026, on the instructions of Tmt. Jothimani, Secretary, private individuals Tr. Thirunavukkarasu and Tr. Dhaksin received the balance bribe amount of Rs.45,000/- from the complainant. Thereafter, Tmt. Jothimani, Secretary, and the two private individuals, Tr. Thirunavukkarasu and Tr. Dhaksin, were arrested and remanded to judicial custody.
